**மே – 17**

# TNPSC துளிகள்

- 6G தொழில்நுட்பங்களுக்கான காப்புரிமையைத் தாக்கல் செய்வதில் முன்னிலையில் உள்ள ஆறு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் எத்தனால் உற்பத்திக்காக இந்திய உணவுக் கழகத்தின் (FCI) 2.8 மில்லியன் டன்கள் (மொத்தம் 5.2 மில்லியன் டன்கள்) அரிசியை மேலும் கூடுதலாக வழங்குவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்குப் பிராந்திய இராணுவத்தில் லெப்டினன்ட் கர்னல் என்ற கௌரவப் பதவி வழங்கப்பட்டுள்ளது.
- தீவிரவாதிகளுக்கு எதிராக காஷ்மீரில் ஆபரேஷன் கெல்லர் என்ற மற்றொரு இராணுவ நடவடிக்கையை இந்திய இராணுவம் தொடங்கியுள்ளது.
- சீனாவின் மாபெரும் மண்டலம் மற்றும் சாலை உள்கட்டமைப்பு என்ற முன்னெடுப்பில் இணைவதற்கு கொலம்பியா நாடானது அதிகாரப்பூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளது.
- அமெரிக்காவும் சவுதி அரேபியாவும் வெள்ளை மாளிகையினால் வரலாற்றில் மிகப் பெரியது என்று அழைக்கப்படுகின்ற சுமார் 142 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு பெரிய ஆயுதக் கொள்முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஆண்டு சர்வதேசக் குடும்ப தினமானது, மே 15 ஆம் தேதியன்று "Family-Oriented Policies for Sustainable Development: Towards the Second World Summit for Social Development" என்ற கருத்துருவின் கீழ் கொண்டாடப் பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஆகமக் கோயில்களை அடையாளம் காண்பதற்கான குழு




- தமிழ்நாட்டில் ஆகம விதிமுறைகளின் படி அமைக்கப்பட்ட கோயில்களையும் இதரக் கோயில்களையும் மூன்று மாதங்களில் அடையாளம் காணுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட குழுவிடம் உச்ச நீதிமன்றம் கோரியுள்ளது.
- ஆகமக் கோயில்கள் அடையாளம் காணப் பட்டவுடன், தற்போதைய நிலையே நிலவ வேண்டும் என்றும், அவற்றில் அர்ச்சகர்கள் (பூசாரிகள்) நியமனம் செய்யப்படக் கூடாது என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.
- சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான நீதிபதி M. சொக்கலிங்கம்

தலைமையில்லான ஒரு குழுவானது இந்த அடையாளம் காணல் நடவடிக்கையினை நடத்தும்.

## 'பவுத்தி பட்டாக்கள்' வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள்

- தமிழக அரசானது மாவட்ட ஆட்சியர்கள் 'பவுத்தி பட்டாக்கள்' வழங்குவதற்கான வழி காட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- வாரிசுப் பட்டாக்கள் என்றும் அழைக்கப்படுகின்ற அவை அப்பட்டாதாரர்கள் இறந்து விட்டால் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு பெயர் மாற்றி வழங்கப்படுகின்றன.
- முன்னதாக, இம்மாநிலத்தில் நடைபெறும் ஜமாபந்திகளின் போது 'பவுத்தி பட்டாக்கள்' வழக்கமாக வழங்கப்பட்டன.




## விரிவாக்கப்பட்ட தடுப்பூசி சேவை



- தமிழ்நாடு அரசானது, அனைத்து செயல்பாட்டில் உள்ள 500 சுகாதார மற்றும் நல மையங்களிலும் அனைவருக்குமான தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் (UIP) கீழ் விரிவாக்கப் பட்ட தடுப்பூசி சேவைகளைத் தொடங்கியது.
- அனைத்து UIP தடுப்பூசிகளும் ஒவ்வொரு புதன்கிழமையும் அனைத்து HWC மையங்களிலும் கிடைக்கப் பெறும்.
- அத்தகைய ஏற்பாடானது, தற்போது அனைத்து 2,286 சுகாதார மற்றும் நலச் சேவை மையங்களிலும் கிடைக்கப் பெறுகிறது.

- தமிழ்நாடு மாநில அரசானது, ஆண்டுதோறும் தொடர்ந்து 99 சதவீதத்திற்கும் மிகவும் அதிகமான தடுப்பூசி வழங்கீட்டு இலக்கினை அடைந்து வருகிறது.

## மின்கம்ப வழித் தொகுப்பு கம்பிவடம்




- முதுமலை புலிகள் வளங்காப்பகத்திற்குள் (MTR) 12 கிலோ மீட்டர் நீளத்திற்கு மின்கம்ப வழித் தொகுப்பு கம்பி வடத்தினை நிறுவுவதில் TANGEDCO பணியாற்றி வருகிறது.
- இவ்வகைத் தொகுப்பு கம்பிவடங்கள் ஆனது, மின் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப் படும் உயர்மட்ட மின் இணைப்புகளாகும்.
- மின்கடத்தாப் பொருட்களால் மிகவும் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள இவை வன விலங்குகளுக்கு, குறிப்பாக யானைகளுக்கு மிகவும் பாதுகாப்பானவையாக அமைந்து உள்ளது.

# தேசியச் செய்திகள்

## உமிழ்வு குறைந்த சரக்குந்துப் போக்குவரத்திற்கான இந்தியாவின் பிரத்தியேக வழித் தடங்கள்





Figure 4: Overview of the approach to short-listing top 50 corridors

- இந்திய அரசானது உமிழ்வு குறைந்த சரக்குந்துப் போக்குவரத்திற்கான இந்தியாவின் பிரத்தியேக/முன்னுரிமை வழித்தடங்கள் குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- நாடு முழுவதும் உமிழ்வு குறைவான சரக்குந்துகளை (ZETs) ஏற்பதற்கான மிக அதிகத் திறனைக் கொண்டுள்ள 10 மிக முக்கியமான நெடுஞ்சாலை வழித் தடங்களை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

- உள்கட்டமைப்பு, பொது-தனியார் கூட்டாண்மை மற்றும் ஒழுங்குமுறை ஆதரவு வழி முறைகளில் எதிர்கால முதலீடுகளை வழி நடத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## சரத்து 142 குறித்து குடியரசுத் தலைவர் கேள்வி





- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், விளக்கக் கேட்பு கடிதத்தினை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்.
- ஆளுநர்கள் மற்றும் குடியரசுத் தலைவருக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்படும் அல்லது பரிசீலனைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மாநில மசோதாக்கள் குறித்து, அவர்கள் மேற் கொள்ளும் நடைமுறையை பரிந்துரைப்பதற்கும் 142வது சரத்தின் கீழ் நீதிமன்றம் அதன் உள்ளார்ந்த அதிகாரங்களைப் பயன்படுத்த முடியுமா என்பது குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்தை இது கோருகிறது.
- 143வது சரத்தின் கீழ் பரிசீலித்து ஒரு கருத்தை வழங்குவதற்காக வேண்டி உச்ச நீதிமன்றத்திற்கு 14 கேள்விகள் கொண்ட ஒரு தொகுப்பினைக் குடியரசுத் தலைவர் அனுப்பியுள்ளார்.
- 201வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் மிக நியாயமானதா இல்லையா என்பது குறித்து உச்ச நீதிமன்றத்தின் முரண்பாடான தீர்ப்புகள் தற்போது இருப்பதாக குடியரசுத் தலைவரின் குறிப்பு கூறியது.
- அரசியலமைப்பின் 142வது சரத்தின் "வரையறைகள் மற்றும் நோக்கம்" குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்தையும் இந்த குறிப்பு கோரியுள்ளது.
- "இயல்பிலேயே அரசியலமைப்பின் விளக்கம் சம்பந்தப்பட்ட கூட்டாட்சி குறித்தப் பிரச்சினைகள்" குறித்த விவகாரங்களை விசாரிக்கக் கோரி, 131வது சட்டப் பிரிவின் கீழ் அல்லாமல், 32வது சரத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்தினை அணுகுவதற்கு மாநில அரசுகள் முயன்று வருகின்றன என்பதையும் அது எடுத்துக் காட்டியது.

## 'பார்கவாஸ்த்ரா' – ஆளில்லா வான்வழி வாகன எதிர்ப்பு அமைப்பு

- 'பார்கவாஸ்த்ரா' என்ற மிகப் புதிய குறைந்த விலையிலான இணை/கூட்டு ஆளில்லா வான்வழி வாகன எதிர்ப்பு அமைப்பை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- இது சோலார் டிஃபென்ஸ் அண்ட் ஏரோஸ்பேஸ் லிமிடெட் (SDAL) என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது சுமார் 2.5 கி.மீ. தொலைவில் உள்ள சிறிய மற்றும் உள்வரும் ஆளில்லா வான்வழி


வாகனங்களைக் கண்டறிந்து அழிக்க முடியும்.

- இந்த அமைப்பானது, சுமார் 5,000 மீட்டருக்கு மேல் உயரமானப் பகுதிகள் உட்பட பல்வேறு நிலப்பரப்புகளில் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## LICOMK++ பெருங்கடல் மாதிரியாக்க அமைப்பு





- சீன ஆராய்ச்சியாளர்கள் LICOMK++ எனப்படுகின்ற சுமார் 1 கிலோமீட்டர் சுற்றளவில் செயல்படுகின்ற மிகவும் உயர் தெளிவுத்திறன் கொண்ட பெருங்கடல் மாதிரியாக்க அமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- இது பெருங்கடல் இயக்கவியல் மற்றும் பருவநிலை வடிவங்களை மாதிரியாக்கம் செய்வதற்கான மேம்பட்ட திறன்களை வழங்குகிறது.
- இந்த மாதிரியாக்கமானது, முன்னறிவிப்பு மற்றும் மாதிரியாக்கத்திற்கான மிகவும்

துல்லியமானத் தரவை வழங்குவதன் மூலம் பருவநிலை ஆராய்ச்சிக்குப் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## AT2024tvd – ஈர்ப்பு விசை வேறுபாட்டு சீர்குலைவு நிகழ்வு

- நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது தற்போது Space Jaws என்ற ஒரு அமைப்பினைக் கண்டறிந்துள்ளது.
- இது புவியிலிருந்து 600 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில், அதன் சூரியனை உள்ளிழுக்கும் அலைந்து திரியும் ஒரு மிகப்பெரிய கருந்துளை நிகழ்வாகும்.
- இந்த அரிய வானியல் நிகழ்வானது, ஈர்ப்பு விசை வேறுபாட்டு சீர்குலைவு நிகழ்வு (TDE) என அழைக்கப்படுவதோடு அது AT2024tvd எனவும் பெயரிடப் பட்டது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உள்நாட்டுப் புலம்பெயர்வு குறித்த உலகளாவிய அறிக்கை 2025

- உள்நாட்டுப் புலம்பெயர்வு கண்காணிப்பு மையமானது (IDMC) சமீபத்தில் இந்த ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 45.8 மில்லியன் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப் பட்டதுடன் பேரிடர் தொடர்பான உள்நாட்டுப் புலம்பெயர்வுகளானது தற்போது உலகம் முழுவதும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளதுன.
- 2024 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில் மிகவும் அதிகமான எண்ணிக்கையிலான உள்நாட்டுப் புலம்பெயர்வுகள் பதிவானது.
- மோதல், வன்முறை மற்றும் பேரழிவுகள் காரணமாக சுமார் 19.3 மில்லியன் மக்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய ஒரு கட்டாயச் சூழல் ஏற்பட்டது என்ற நிலையில் இதில் 7.8 மில்லியன் பேர் பேரிடர்கள் காரணமாக இடம்பெயர்ந்தனர்.
- கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் சுமார் 16.2 மில்லியன் உள்நாட்டுப் புலம் பெயர்வுகள் பதிவாகின என்ற நிலையில் அவற்றில் சுமார் 14.8 மில்லியன் பேர் பேரிடர் காரணமாக இடம் பெயர்ந்தனர்.
- இதனைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டில் 14.5 மில்லியன் மக்கள் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்ததுடன், (பேரிடர் காரணமாக 13.1 மில்லியன் பேர்) அமெரிக்கா இடம்


பெற்றுள்ளது.

- தெற்காசியாவில் 9.2 மில்லியன் உள்நாட்டுப் புலம்பெயர்வுகள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் அவற்றில் கிட்டத்தட்ட அனைத்தும் பேரிடர்கள் காரணமாக ஏற்பட்டவை ஆகும்.
- மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவில் சுமார் 5.7 மில்லியன் அளவு உள்நாட்டுப் புலம்பெயர்வுகள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் இதில் சுமார் 599,000 பேரிடர்கள் காரணமாக ஏற்பட்டவை.
- ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் இந்த ஆண்டில் 846,000 என்ற மிகக் குறைந்த எண்ணிக்கையிலான உள்நாட்டுப் புலம்பெயர்வுகள் பதிவாகின என்ற ஒரு நிலையில் அவற்றில் சுமார் 358,000 பேரிடர் காரணமாக ஏற்பட்டவையாகும்.




# மாநிலச் செய்திகள்

## வருடாந்திரப் பிறப்பு விகிதம்





- தமிழ்நாடு, டெல்லி மற்றும் கேரளா ஆகியவற்றிற்கான வருடாந்திரப் பிறப்பு விகிதம் தேசிய சராசரியை விட இரண்டு மடங்கு விகிதத்தில் குறைந்து வருகிறது.
- வருடாந்திரப் பிறப்பு விகிதமானது, மக்கள்தொகையில் 1,000 பேருக்கு எத்தனை குழந்தைப் பிறப்புகள் என வரையறுக்கப்படுகிறது.
- மாதிரிப் பதிவு அமைப்பானது (SRS) 2021 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் அறிக்கையின் தரவானது, 2021 ஆம் ஆண்டில் அகில இந்தியப் பிறப்பு விகிதம் 19.3 ஆக இருந்ததைக்

குறிப்பிடுகிறது.

- இது 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டும் 1.12% என்ற விகிதத்தில் குறைந்து வந்தது.
- அதே காலக் கட்டத்தில், தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் (CBR) ஆனது ஒவ்வோர் ஆண்டும் 2.35% என்ற விகிதத்தில் குறைந்து வந்தது.
- டெல்லியின் CBR ஆனது 2.23% என்ற விகிதத்திலும், கேரளாவின் பிறப்பு விகிதம் 2.05% என்ற விகிதத்திலும் குறைந்து வந்தது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச ஆர்கானியா மர தினம் 2025 - மே 10




- சமூக மேம்பாடு மற்றும் நிலைத்தன்மையில் ஆர்கான் மரத்தின் பங்கை எடுத்துக் காட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொண்டாட்டமானது, ஆர்கான் மரமானது மொராக்கோ பேரரசின் வட்டார இனமாக உள்ள இதனை உலகிற்கு உணர்த்துவதற்கான மொராக்கோவின் முக்கிய முன்னெடுப்புகளை எடுத்துக் காட்டுகிறது.
- ஆர்கான் மரம் (ஆர்கானியா ஸ்பினோசா) மொராக்கோவின் தென்மேற்கில் உள்ள துணை-சஹாரா பகுதியைச் சேர்ந்த ஒரு பூர்வீக இனமாகும்.
- மொராக்கோ நாடானது உலகளவில் ஆர்கான் தொடர்பான பொருட்களின் முக்கிய ஏற்றுமதியாளராக உள்ளதால், ஆர்கான் மரங்கள் மொராக்கோ மற்றும் மொராக்கோ கலாச்சாரத்தில் ஒரு சிறப்பு இடத்தைக் கொண்டுள்ளன.

# இதரச் செய்திகள்

## காம்பர்ட்சேவ் மலைகள்

- காம்பர்ட்சேவ் மலைகள் அளவிலும் வடிவத்திலும் ஐரோப்பிய ஆல்ப்ஸ் மலைகளைப் போலவே உள்ளன.
- அவை கிழக்கு அண்டார்டிகா பனிப்படலத்தின் மிக உயரமான இடத்திற்கு அடியில் புதையுண்டுள்ளன.
- தற்போது கிழக்கு அண்டார்டிகாவை உள்ளடக்கிய கண்ட மேலோடு ஆனது, சுமார் 700


மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலான மிகப் பழமையான குறைந்தது இரண்டு பெரிய கண்டங்களிலிருந்து உருவானதாக கண்டத் தட்டுகளின் நகர்வு மாதிரிகள் தற்போது தெரிவிக்கின்றன.

❖ சிர்கான் படிகங்களின் முக்கியப் பகுப்பாய்வின்படி, காம்பர்ட்சேவ் மலைகள் சுமார் 650 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மேலெழும்பத் தொடங்கி சுமார் 580 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக இமயமலை உயரத்தை எட்டின.

❖ பின்னர் அது சுமார் 500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முடிவடைந்த ஆழமான கண்ட மேலோடு உருகுதல் மற்றும் ஓட்டத்தை எதிர் கொண்டன.

❖ இவற்றின் படிக அமைப்பில் மிகக் குறைந்த அளவு யுரேனியம் இருப்பதால், இந்தச் சிர்கான்கள் பெரும்பாலும் "தகவல் தொகுப்பு" (time capsules) என்று அழைக்கப் படுகின்றன.

❖ இதில் யுரேனியமானது அறியப்பட்ட ஒரு விகிதத்தில் சிதைவடைவதால், அறிவியல் ஆய்வாளர்கள் அவற்றின் காலக் கட்டத்தினை மிகத் துல்லியமாகத் தீர்மானிக்க வழி வகுக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★